செ.வெ.எண்: 29 /பிப்ரவரி நாள்: 15.02.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

# தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் அரசு அலுவலர்களுக்கான மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், இராமநாதபுரம் மாவட்ட பிரிவின் சார்பில் மாவட்ட அளவிலான அரசு அலுவலர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் 18.02.2016 வியாழக்கிழமை காலை 9.00 மணி முதல் இராமநாதபுரம் SDAT - சீதக்காதி சேதுபதி விளையாட்டு அரங்கில் வைத்து நடைபெறவுள்ளது.

**நடைபெறும் போட்டிகள்:**

**தடகளம் : ஆண்கள் :** 100 மீ, 200 மீ, 800 மீ, 1500 மீ , நீளம் தாண்டுதல் ,உயரம் தாண்டுதல், குண்டு எறிதல், 4 x 100 மீ தொடர் ஓட்டம்

**பெண்கள்:** 100 மீ, 200 மீ, 400 மீ, 800 மீ, நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல், குண்டு எறிதல், 4 x 100 மீ தொடர் ஓட்டம்

**குழுவிளையாட்டுப் போட்டிகள் :**

இறகுப்பந்து - ஆண்கள், பெண்கள்
கூடைப்பந்து - ஆண்கள், பெண்கள்
கால்பந்து - ஆண்கள் மட்டும்
டென்னிஸ் - ஆண்கள், பெண்கள்
கபடி - ஆண்கள், பெண்கள்
மேசைப்பந்து - ஆண்கள், பெண்கள்
வாலிபால் - ஆண்கள், பெண்கள்

தடகளப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கும், குழு விளையாட்டுக்களில் முதல் இரு இடங்களைப் பெறுபவர்களுக்கும் தகுதிச் சான்றிதழ்கள் வழங்கப்படும். போட்டியில் அனைத்து நிரந்தர அரசுப் பணியாளர்கள், மற்றும் அரசுப் பள்ளி உடற்கல்வித் துறை ஆசிரியர்கள் மட்டும் கலந்து கொள்ளலாம். SEMI GOVT AUTOMOMOUS BODIES, State Public Sector Undertakings, Defence Services, Para Military, காவல்துறை, தீயணைப்புத்துறை ஆகிய துறைகளைச் சேர்ந்தவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.

போட்டியில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் மதிய உணவு மற்றும் தேநீர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் போட்டியாளர்களுக்கு சிறப்பு தற்செயல் விடுப்பு வழங்கப்படும். போட்டியாளர்களுக்கான தினப்படி மற்றும் பயணப்படியை தாங்கள் பணியாற்றம் துறையிலேயே பெற்றுக் கொள்ள வேண்டும். தடகளத்தில் முதலிடம் பெறுபவர்களும், குழு விளையாட்டுகளில் சிறந்த போட்டியாளர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு அரசு செலவில் சீருடை வழங்கப்பட்டு போட்டிக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள். போட்டியில் கலந்து கொள்ள விருப்பம் உடையவர்கள் 18.02.2016 அன்று காலை 9.00 மணிக்கு போட்டியில் கலந்து கொள்ள ஏதுவான சீருடை மற்றும் உபகரணங்களுடன் இராமநாதபுரம் SDAT - சீதக்காதி சேதுபதி விளையாட்டு அரங்கிற்கு வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**